


**16. 11. 2025**

தலைப்புச் செய்திகள்

1. இந்திய தலைமை கணக்கு தணிக்கை துறை பொதுமக்களின் பாதுகாவலாக திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. பிஹாரில் புதிய அரசு அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி தலைவர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

3. பத்திரிக்கைகள் ஜனநாயகத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் சம்பா நெற்பயிர் காப்பீட்டிற்கான காலஅவகாசம் இம்மாத இறுதிவரை நீட்டிக்கப் பட்டுள்ளது.

5. தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற இன்னும் 56 ரன் எடுத்தாக வேண்டும்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

<u>சி.பி.ராதாகிருஷ்ணன்</u>

இந்திய தலைமை கணக்கு தணிக்கை துறை பொதுமக்களின் பாதுகாவலாக திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற தணிக்கை தின கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இத்துறை நேர்மை, உண்மை மற்றும் வெளிப்படை தன்மையை நிலைநாட்டும் தூணாக விளங்குவதாக குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த பாரத இலக்கை நோக்கி நாடு முன்னேறி வரும் நிலையில் பொது செலவீனங்களில் வெளிப்படைத் தன்மையை மேலும் அதிகரிக்கவும்,

மக்களின் பணம் பொதுநலனுக்கு பயன்படுத்தப் படுவதை உறுதி செய்யவும், தணிக்கை துறை குறிப்பிடத்தக்க பங்கு வகிப்பதாக திரு. சி.பி.ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கணக்கு தணிக்கை துறை தலைவர் ஆசிய அளவிலான தணிக்கை நிறுவனங்களின் அமைப்பிற்கு தலைமை வகிப்பது இந்தியா உலகளவிலான தலைவர்களை உருவாக்கி வருவதற்கு சான்றாக விளங்குவதாக பெருமிதம் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

<u>பீஹார்</u>

பீஹாரில் புதிய அரசு அமைப்பது குறித்த பேச்சுவார்த்தைகளில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி தலைவர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய அமைச்சரும், லோக் ஜன்சக்தி கட்சியின் தலைவருமான திரு.சிராக் பாஸ்வான், ஹிந்துஸ்தானி அவாமி மோர்ச்சா கட்சித்தலைவர் திரு. சந்தோஷ் சுமன் உள்ளிட்டோர், ஐக்கிய ஜனதாதள கட்சித்தலைவரும் முதலமைச்சருமான திரு.நிதீஷ்குமாரை சந்தித்து பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டுள்ளனர்.

இதனிடையே ஐக்கிய ஜனதாதள சட்டப்பேரவை கட்சிக் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது

இதில் கட்சித்தலைவர் திரு. நிதீஷ்குமார், சட்டப்பேரவை கட்சித்தலைவராக தேர்ந்தெடுக்கப் படுவார் என தெரிகிறது.

இந்நிலையில் மாநில அரசின் கடைசி அமைச்சரவை கூட்டம் நாளை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் அமைச்சரவையை கலைக்க பரிந்துரை செய்யப்படும்.

❖❖❖❖❖❖❖❖

<u>பத்திரிக்கை தினம்</u>

தேசிய பத்திரிக்கை தினம் இன்று கொண்டாடப் படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் மத்திய அரசு ஜனநாயகத்தின் தூணாக விளங்கும் பத்திரிக்கை துறையை வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளதாக கூறியுள்ளார்.

உண்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்பேற்றல் உள்ளிட்டவற்றை உணர்ந்து சமூகப் பணியாற்றும் ஊடகத்தினரின் அயராத முயற்சிகளுக்கு வணக்கம் செலுத்துவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில் பத்திரிக்கைள் ஜனநாயகத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கும் ஆற்றலாக விளங்க வேண்டுமென்று கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதிய உலகில் துணிச்சலுடன் செய்தியளித்தல் – பத்திரிக்கை சுதந்திரம் மற்றும் ஊடகங்களில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

❖❖❖❖❖❖❖❖❖

<u>ஜீதேந்திர சிங்</u>

மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜீதேந்திர சிங், ஜம்மு காஷ்மீரில் 924 கோடி ரூபாய் மதிப்பிலான சாலை திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டினார்

உதம்பூர், கத்துவா, தோடா மக்களவை தொகுதியில் 87 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டங்களையும் தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

<u>ஜெய்சங்கர்</u>

இந்தியா – பஹ்ரைன் உடனான உறவுகள் மேலும் வலுப்படுத்தப்படும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு அமைச்சர் அப்துல் லத்தீஃப் உடன் தொலைபேசி மூலம் ஆலோசனை மேற்கொண்ட அவர், மண்டல மற்றும் உலகளாவிய விஷயங்கள் குறித்து பல்வேறு கருத்துக்களை பகிர்ந்து கொண்டதாக சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

<u>விமானப்பயிற்சி</u>

இந்தியா – பிரான்ஸ் விமானப்படைகளுக்கான 8-வது விமானப்பயிற்சி கருடா 25, பிரான்சில் இன்று தொடங்குகிறது.

வான் பாதுகாப்பு, தொழில்நுட்பம், கூட்டாண்மை உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் இருநாட்டு விமானப்படை விமானங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

வரும் 27-ம் தேதிவரை நடைபெறும் இப்பயிற்சியில் இந்தியாவின் சுகோய்-30-MKI, ஐ.எல் - 78, பிரான்சின் ரஃபேல் பன்னோக்கு போர் விமானங்கள் உள்ளிட்டவை பங்கேற்றுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் முதலீடு செய்யுமாறு பேட்டி அளிப்பது போன்று சமூக ஊடகங்களில் வெளியான காட்சி போலியாக சித்தரிக்கப்பட்டது என்று மத்திய அரசின் தகவல் சரிபார்ப்பகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

டெல்லி செங்கோட்டை

டெல்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்தையடுத்து மூடப்பட்டிருந்த செங்கோட்டையை பொதுமக்கள் பார்வையிட இன்றுமுதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10-ம் தேதி நேரிட்ட இச்சம்பவத்தை அடுத்து கடந்த 6 நாட்கள் செங்கோட்டை மூடப்பட்டிருந்த நிலையில் இன்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

MRK. பன்னீர் செல்வம்

தமிழகத்தில் சம்பா நெற்பயிர் காப்பீடு செய்ய வரும் 30-ம் தேதி வரை காலஅவகாசம் நீட்டிக்கப் பட்டுள்ளதாக மாநில வேளாண் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. M.R.K. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

இதுவரை காப்பீடு செய்யாத விவசாயிகள், பொது சேவை மையங்கள் தொடக்கவேளாண் கூட்டுறவு சங்கங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் காப்பீடு செய்து பயனடையுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, மதுரை, புதுக்கோட்டை உள்ளிட்ட 27 மாவட்டங்களில் இதுவரை 15 லட்சம் ஏக்கர் சம்பா பயிர்கள் மட்டுமே காப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்மழை, குறுவை நெல் அறுவடை மற்றும் சம்பா நெல் நடவு பணிகள் தாமதம் உள்ளிட்ட பல்வேறு

காரணங்களுக்காக விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இந்த காலநீட்டிப்பு செய்ய மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

<u>நயினார் நாகேந்திரன்</u>

தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்ய திட்டமிட்டிருந்த பன்னாட்டு நிறுவனங்கள் பிற மாநிலங்களுக்கு செல்வது தொடர்ந்து நடைபெறுவதாக பி.ஜே.பி. மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் குறைகூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இத்தகைய நடவடிக்கைகளால் 20 ஆயிரம் தமிழக இளைஞர்களுக்கான நேரடி வேலை வாய்ப்புகள் பிறமாநிலங்களுக்கு சென்றுவிட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

<u>இருவரி</u>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த கணக்கெடுப்பு படிவங்கள் இதுவரை 88.8 சதவிகிதம் பேருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இப்படிவத்தை பூர்த்தி செய்வது குறித்த சந்தேகங்களுக்கு இலவச தொலைபேசி எண் 1950-ஐ தொடர்பு கொள்ளலாம்.

பேருந்து செல்லும் பயணிகள் படிகட்டுகளில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டால் பேருந்தின் உரிமம் ரத்து செய்யப்படும் என்று சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி எச்சரித்துள்ளார்.

இருசக்கர வாகனங்கள் உள்ளிட்ட பிற வாகன ஓட்டிகள் முறைகேடுகளில் ஈடுபடுவதை தடுக்க, வட்டார போக்குவரத்து அலுவலர்கள், தினமும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழகம் முழுவதும் ஆசிரியர் தகுதித்தேர்வு 2-ம் தாள் ஆயிரத்து 241 மையங்களில் இன்று நடைபெற்றது.

நாகை மாவட்டத்தில் சமுதாய திறன் பயிற்சி பள்ளிகளில் சேர விருப்பமுடையோர் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் வட்டார இயக்க மேலாளரை தொடர்பு கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் பிரதமரின் ஆதர்ஷ் கிராம யோஜனா திட்டத்தின் கீழ் 5 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பில் அங்கன்வாடி மையம், மேல்நிலை நீர்த்தேக்க தொட்ட, சிமெண்ட் சாலை உள்ளிட்ட 45 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தர்மபுரி மாவட்டம் அரூரில் மரம் வளர்ப்பு தொடர்பான பசுமை மாரத்தான் போட்டியை அரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி தினகரன் இன்று தொடங்கிவைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலான மாரத்தான் ஓட்டம் ஈரோடு ரெங்கம் பாளையத்தில் இன்று நடைபெற்றது.

ஆட்சித்தலைவர் திரு.ரெங்கசாமி உள்ளிட்ட ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் இளைஞர்களுக்கு தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை விற்பனை செய்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

கோவில்

சபரிமலை சுவாமி ஐயப்பன் திருக்கோவில் நடை மண்டல – மகர விளக்கு பூஜைகளுக்காக இன்று திறக்கப்படுகிறது.

இணையதளம் வாயிலாக நாள் ஒன்றுக்கு 70 ஆயிரம் பேருக்கும், உடனடி பதிவு மூலம் 20 ஆயிரம் பேருக்கும் தரிசனத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

மண்டல பூஜை அடுத்தமாதம் 27-ம் தேதியும், மகர விளக்கு பூஜை வரும் ஜனவரி 14-ம் தேதியும் நடைபெறும்.

மயிலாடுதுறையில் ஐப்பசி மாத காவிரி துலா உற்சவத்தின் முக்கிய நிகழ்ச்சியான கடைமுக தீர்த்தவாரி இன்று நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

கொல்கத்தாவில் தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3-ம் நாளான இன்று இந்தியா தனது 2-வது இன்னிங்ஸில் சற்றுமுன் 6 விக்கெட் இழப்பிற்கு 74 ரன் எடுத்திருந்தது.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் :

இந்தியா 189

தென்னாப்பிரிக்கா 159

இரண்டாவது இன்னிஸ் தென்னாப்பிரிக்கா 153.

❖❖❖❖❖❖❖❖